

කාර්යසාධන වාර්තාව
செயலாற்றுகை அறிக்கை 2023
Performance Report

වෙළෙඳ, වාණිජ හා ආහාර සුරක්ෂිතතා අමාත්‍යාංශය
வர்த்தக,வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
Ministry of Trade, Commerce and Food Security

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை- 2023

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
இலக்கம் 492, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
கொழும்பு 03

உள்ளடக்கம்

1. ஆம் அத்தியாயம் -நிறுவன விபரம்/ செயல்படுத்தல் சாராம்சம் 1

1.1 அறிமுகம் 1

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக் கூற்று, நோக்கங்கள் 1

1.3 செயற்பாடுகள் 4

1.4 நிறுவனக் கட்டமைப்பு – வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு 5

1.5 அமைச்சின் கீழ் பேணப்படும் தினைக்களங்கள் 6

1.6 அமைச்சின் கீழ் பேணப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதிகள் 6

1.7 வெளிநாட்டு உதவி பெறும் வேலைத்திட்டங்களின் விபரம் 6

2. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு 7

2.1 முன்னேற்றம் 7

2.2 சிறப்பு அடைவுகளிற்கான சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் 12

3. ஆம் அத்தியாயம் - 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று 16

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 16

3.2 நிதி நிலைமைக் கூற்று 18

3.3 நிதிபாய்ச்சல் கூற்று 19

3.4 நிதிக்கூற்று அட்டவணை 20

3.5 வருமானம் சேமிக்கும் செயலாற்றுகை 21

3.6 ஒதுக்கீடுகளின் பயன்பாடு தொடர்பான செயலாற்றுகை 21

3.7 நி.அ 208 ன் படி, வேறு அமைச்சு/ திணைக்களத்தின் மூலம் இவ் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 21

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை 21

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 22

4. ஆம்அத்தியாயம்- செயலாற்றுகைக் குறிகாட்டிகள் 29

4.1 நிறுவன செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்) 29

5. ஆம் அத்தியாயம்- நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை 30

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை 30

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான அடைவுகள் மற்றும் சவால்கள் 31

0.6 ஆம் அத்தியாயம் - மனிதவள விபரம் 32

6.1 பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம் 32

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவள பற்றாகுறை அல்லது அதிகரிப்பு பாதித்த விதம் 32

6.3 மனிதவள அபிவிருத்தி 32

07.ஆம்அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை 34

1. ஆம் அத்தியாயம் -நிறுவன விபரம்/ செயல்படுத்தல் சாராம்சம்

1.1 அறிமுகம்

2019.12.10 ஆம் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிக்கையின் கீழ் உள்நாட்டு வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சாக நிறுவப்பட்ட இவ் அமைச்சு பின் 2020.08.29 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மற்றும் 2020.12.11 திகதியிடப்பட்ட 2205/14 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மூலம் வர்த்தக அமைச்சாக நிறுவப்பட்டதுடன் 2021.05.27 திகதியிடப்பட்ட இலக்கம் 2281/41 அதி விஷேட வர்த்தமானி, 2022.07.22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மற்றும் 2022.12.22 ஆம் திகதிய 2311/42 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி ஊடாக வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சாக நிறுவப்பட்டுள்ளது.

நுகர்வோரின் உரிமையை பாதுகாத்து போட்டிமிக்க தேசிய சந்தை மூலம் மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், வர்த்தகப் பிரிவிற்கு தலைமைத்துவம் அளித்து சேவைகள் மற்றும் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், தேசிய வர்த்தக கொள்கையொன்றை தாபித்தற்கு நடவடிக்கை எடுத்தல், அவ்வர்த்தகக் கொள்கையை ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்தலின் ஊடாக இலங்கையர்களின் அன்றாட நுகர்வுப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தையும் உயர் மட்டத்தில் பேணுவதற்கு இவ்வமைச்சு நேரடியாகப் பங்களிப்பை வழங்குகிறது. மேலும், உணவுப் பாதுகாப்பை சரிபார்க்கும் பொருட்டு இவ் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களை ஒருங்கினைத்தல் முதன்மையான செயற்பாடாகும், அத்துடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும், அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரித்தற்கும் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1 . நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக் கூற்று, நோக்கங்கள்

தொலைநோக்கு

"நிலைபேறான அபிவிருத்தியடைந்த இலங்கை"

பணிக் கூற்று

வர்த்தகப் பிரிவின் தலைமையில் சேவை வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஏனைய சேவை வழங்குனர்களினதும் நுகர்வோரினதும் சமத்துவத்தையும் வர்த்தக உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறான தேசிய வர்த்தக கொள்கையொன்றை தாபித்தல், பேணுதல் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தக சம்பந்தத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், இலங்கையரின் அன்றாட நுகர்வு பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் உயர் வாழ்க்கைத்தர நிலமையை பேணுவதற்கும் பங்களிப்பு வழங்குதல்.

நோக்கங்கள்

i. தேசிய வர்த்தகக் கொள்கை மூலம் தேசிய உற்பத்தியாளர்களதும் நுகர்வோரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சந்தையைக் கையாளும் நிர்வாகத்திற்கான கருவியாக தீர்வை வரிக் கொள்கையை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான வரிச் சலுகைகளை வழங்குதல் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

ii. சந்தையில் பொருட்களின் விலை அசாதாரணமான முறையில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல் தொடரை அதிகரிப்பதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைச் செலவை குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லுதல்.

iii. திறந்த போட்டித் தன்மையான சந்தைச் சூழலில் இலங்கை சதொச நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் போன்ற அரச நிறுவனங்கள் ஊடாக நுகர்வோருக்கு சலுகை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

iv. வர்த்தகப் பிரஜைகளைப் போன்றே நுகர்வோரினதும் பயனுக்காக அளவையியல் அலகுகள் தரங்களை உரியவாறு நடைமுறைப்படுத்துவதை சான்றுப்படுத்தல்.

v. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்பை (Buffer Stock) பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைப் போன்றே உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல்.

vi. நுகர்வோர் பாதுகாப்பிற்குரிய சட்ட நடவடிக்கைகள் பொருட்டு நுகர்வோர் சேவை அதிகாரசபைக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

vii. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஏற்புடைய தரவுத் தொகுதியொன்றைப் பேணுதல், அத்தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தல் மற்றும் அத்தரவுகளை வெளிவாரித் தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.

viii. உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உரிய தரங்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டுதல்.

ix. உயர் கல்வியில் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பதற்கு ஏற்புடைய நலன்புரி செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்குப் பங்களிப்பு வழங்குதல்.

x. தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்.

xi. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப நடத்திச் செல்லப்படும் இணக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரச் சேவையை சான்றுப்படுத்துவதற்குரிய வழிகாட்டல்.

xii. இலங்கை பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தை வாய்ப்பின் பொருட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான நிறுவன பின்னணியை அமைத்து கொடுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்தல்.

xiii. இயைபுடைய இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு ரீதியாக நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்யும்போது வசதிகளைத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

xiv. இலங்கையில் எற்றுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட அடிப்படை முறை (GSP), பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கை(NMTR), சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கை (RTA) போன்றவற்றின் சட்டரீதியான ஒருங்கிணைத்தலுக்கு தேவையான வழிக்காட்டல்.

1.3 செயற்பாடுகள்

i. அரசு மூலம் நடைமுறைப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏனைய தேசிய கொள்கைகளின் மீதான வர்த்தக விடயங்களுடன் தொடர்புடைய கொள்கையை உருவாக்குதல்.

ii. அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க நிறுவனங்களின் விடயதானங்கள் மற்றும் பணிகள், அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்ட உருவாக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்.

iii. தேசிய வர்த்தகக் கொள்கையை தயாரித்தல் மற்றும் அக்கொள்கையை மேற்கொள்வதற்கு தேவையான ஒருங்கினைப்பு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல்.


iv. நுகர்வோரைப் பாதுகாப்பதற்குத் தேவையான சந்தைப் போட்டித் தன்மையை ஏற்படுத்தல், சந்தை மேற்பார்வை, சுற்றிவளைப்பு மற்றும் வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

v. உள்ளூர் சந்தையில் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்தும் இடையீட்டாளராகச் செயற்படல்.

vi. உலக வர்த்தக சந்தையினுள் புதிய ஏற்றுமதிச் சந்தர்ப்பங்களை இனங்காணுதல், அதே போல் புதிதாக இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்காக நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் தேவையான வசதிகளை திட்டமிடல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு ïவர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

நிறுவனக் கட்டமைப்பு – வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு



*பதவியிழந்த ராஜாங்க அமைச்சுச் செயலாளர்கள் பற்றி நடவடிக்கை எடுத்தலின் கீழ் இவ்வலுவலர்களுக்கு தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்டது.

**இப்பதவியை ஒடுக்குமாறு முகாமைச் சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

1.5 அமைச்சின் கீழ் பேணப்படும் தினைக்களங்கள்

அமைச்சிடம் அளிக்கப்பட்டுள்ள பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அமைச்சின் கீழ் பேணப்படும் தினைக்களங்கள் நான்கு உள்ளன.

- உணவு ஆணையாளர் திணைக்களம்.
- அளவையியல் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்.
- வர்த்தகத் திணைக்களம்.
- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

1.6 அமைச்சின் கீழ் பேணப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதிகள்

அமைச்சிடம் அளிக்கப்பட்டள்ள பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அமைச்சின் கீழ் பேணப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள் பின்வருமாறு:

- வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்.
- ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதரம் பெற்ற சபை.
- லலித் அதுலத்முதலி மாஹபொல உயரக்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
- நுகர்வோர் விவகார அதிகாரசபை
- கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு
- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்
- இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்.
- கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்.
  (தற்போது இந்நிறுவனத்தை கலைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது)

1.7 வெளிநாட்டு உதவி பெறும் வேலைத்திட்டங்களின் விபரம்

1.7.1 வெளிநாட்டு உதவி பெறும் வேலைத்திட்டங்கள்

அ) **வேலைத்திட்டத்தின் பெயர்** : புலமைச்சொத்து அலுவலக நடவடிக்கைகளை டிஜிட்டல் மயப்படுத்தல்

ஆ) **பங்காண்மை முகவரகம் :** உலக புலமைச் சொத்து அமைப்பு மற்றும் இலங்கை புலமைச்சொத்து அலுவலகம்.

இ) **வேலைத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு** : ரூபா 90 மில்லியன்

ஈ) **வேலைத்திட்டத்தின் கால வரையறை** : வருடம் 2022 - 2024

2. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு

2.1 முன்னேற்றம்

1. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைத்தல் (Availability) மற்றும் கொள்வனவு இயலுமையை (Affordability) உறுதிப்படுத்தல்

- திறந்த கணக்கு அமைப்பின் (Open Account) கீழ் 3,864 மெட்ரிக் தொன் சோள மா 2023.01.31 ஆம் திகதி வரை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

- சந்தையில் முட்டைத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு 2023 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 169.6 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்தல் மற்றும் அம்முட்டைகளை லங்கா சதொச விற்பனை வலையமைப்பின் ஊடாக ரூ. 35 என்ற குறைந்த விலையில் விற்றமை. இந்நிகழ்ச்சித்திட்டம் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதுடன் அக்காலப்பகுதியில் 60 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யத் தீர்மானித்திருத்தல்.

- சந்தையில் சீனி விலை பாரியளவில் உயர்வடைந்தமையால் இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடி 6,500 மெட்ரிக் தொன் சீனியை ரூ. 275.00 என்ற கட்டுப்பாட்டு விலையில் லங்கா சதொச, கூட்டுறவு மற்றும் சுப்பர் மார்க்கட் வலையமைப்பின் ஊடாக விற்க நடவடிக்கை எடுத்தல்.

- உள்நாட்டு பெரிய வெங்காயத்திற்கு சந்தையில் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்து 90,000 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு கோரும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்.

- உள்நாட்டு பெரிய வெங்காயத்திற்கு சந்தையில் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக நெகிழ்வான கொடுப்பனவு முறை (Flexible Payment Terms) இன் கீழ் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு பாகிஸ்தான் அரசிடம் கோரும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்.

- சந்தையில் நிலவும் கீரி சம்பா அரிசித் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக கீரி சம்பா அரிசி வகையை ஒத்த GR11 அரிசியில் 50,000 மெட்ரிக் தொன்னை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையிடம் கோரும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்

2. **அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வரித் திருத்தம் பொருட்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிற்கு பரிந்துரைகளை வழங்கல்.**

- உலக சந்தையில் பால் மா விலை குறைவடைந்தமையைக் கருத்திற் கொண்டு பால் மா இறக்குமதியின்போது இடைநிறுத்தப்பட்டிருந்த கி.கிராமிற்கு ரூ.125 என்ற சுங்க இறக்குமதி வரியையும் 10% ஆன துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரியையும் மீள விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

- 2023 இல் சிறுபோக உள்நாட்டு உருளைக்கிழங்கு விளைச்சலைக் கவனத்திற் கொண்டு கி.கிராமிற்கு ரூ.50 ஆகவுள்ள விசேட வர்த்தகப் பண்ட வரியை 2023 ஒக்ரோபர் முதல் எதிர்வரும் 03 மாதங்களுக்கு நீடிக்க நடவடிக்கை எடுத்தல்.

- 2023 டிசம்பர் முதல் மரக்கறி விலை உயர்வடைந்தமை மற்றும் 2023 இல் சிறுபோக உள்நாட்டு உருளைக்கிழங்கு விளைச்சல் நிறைவடைந்தமையைக் கவனத்திற் கொண்டு கி.கிராமிற்கு ரூ.50 ஆகவுள்ள விசேட வர்த்தகப் பண்ட வரியை கி.கிராமிற்கு ரூ.10 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. **இறக்குமதிக் கொள்கைகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிற்கு சோளம் மற்றும் ரையில் (Tiles) பற்றி அறிக்கையிட நடவடிக்கை எடுத்தல்**

4. **சந்தை மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி பற்றிய தகவல்கள்**

- பன்னிரண்டு பிரதான அத்தியாவசிய உணவுப்பொருட்கள், அதாவது, அரிசி, சோளம் மா, சீனி, பருப்பு, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, ரின்மீன், பால்மா, நெத்தலி, முட்டை, கோழி இறைச்சி மற்றும் தேங்காய் எண்ணெய் என்பன பொருட்டு உரிய வர்த்தகத் தகவல்களை உள்ளடக்கி வர்த்தக வெட்டுமுகங்களைப் (Trade Profiles) பேணுதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பிரதான இறக்குமதி, ஏற்றுமதிச் சேரிடங்களில் உள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தகவல்களை உள்ளடக்கிய இறக்குமதி/ ஏற்றுமதி வெட்டுமுகங்களைப் (Import/Export Profiles) பேணுதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தனியார் துறை ஊடாக 6000 மெட்ரிக் தொன் பாசுமதி அரிசியை இறக்குமதி செய்வதற்கான கோட்டா ஒன்று வெளியிடப்பட்டதுடன் அதன் மூலம் 200 மெட்ரிக் தொன் அரிசி 2023.12.31 ஆம் திகதியன்று இறக்குமதி செய்திருத்தல்.

5. வர்த்தக உடன்படிக்கை பற்றிய கலந்துரையாடல்களுக்கு அமைச்சைப் பிரதிநிதிப்படுத்தல்.

- தாய்லாந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பண்ட விற்பனை (Trade in Goods) மற்றும் உரிய கலந்துரையாடல் குழுவிற்கு அமைச்சினைப் பிரதிநிதிப்படுத்தல்.
- இந்திய இலங்கை பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் (ETCA) கீழ் பண்ட விற்பனை (Trade in Goods) மற்றும் உரிய கலந்துரையாடல் குழுவிற்கு அமைச்சினைப் பிரதிநிதிப்படுத்தல்.

6. உணவுப்பொருள் இறக்குமதியாளர் மற்றும் அவர்களின் சங்கங்களுடன் வர்த்தக விலை போக்குகள் மற்றும் விநியோகம் பற்றி கலந்துரையாடல்.

சங்கம்	அத்தியாவசிய உணவுப்பொருள்	திகதி
அரிசி இறக்குமதியாளர்	அரிசி	2023.12.27
பால்மா இறக்குமதியாளர் சங்கம்	பால்மா	2023.12.05 2023.07.11
சீனி இறக்குமதியாளர் சங்கம்	சீனி	2023.12.05 2023.11.24 2023.11.20 2023.11.15 2023.11.08 2023.06.23 2023.05.12
ரின்மீன் இறக்குமதியாளர் சங்கம்	ரின்மீன்	2023.12.05 2023.08.24
நெத்தலிக்கருவாடு இறக்குமதியாளர்	நெத்தலிக்கருவாடு	2023.10.06
சோளமா இறக்குமதியாளர்	சோளமா	2023.12.05 2023.07.20

7. கூட்டுறவுச் சதுக்கம் நிர்மாண வேலைத்திட்டம்

மொத்தக் கூட்டுறவு வலையமைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் அப்போதிருந்த கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் ஊடாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடமுள்ள இல.32/1, சேர்.மொகமட் மாகம் மாக்கர் வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள காணியில் 34 மாடிகளைக்கொண்ட ''கூட்டுறவுச் சதுக்கம்'' என்ற பெயரில் கூட்டுறவு வர்த்தக மத்தியநிலையம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் இதனை 2023 ஆம் ஆண்டளவில் மீள நிர்மாணிப்பதற்கான முன்மொழிவொன்று அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டது.

8. மன்னார் மாவட்டத்தில் தாராபுரம் கூட்டுறவுக் கிராமிய வேலைத்திட்டம்

2023 இல் தாராபுரம் வேலைத்திட்டத்தின் கீழ் கேட்போர்கூட கட்டடம் மற்றும் மாநாட்டு மத்தியநிலையம் என்பன கட்டார் அரசின் ஏற்பாட்டில் மீள ஆரம்பிக்க முன்மொழியப்பட்டுள்ளதுடன், தற்போது இதன் எதிர்கால நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

9. தம்புள்ளை காலநிலை கட்டுப்பாட்டுக் களஞ்சிய வேலைத்திட்டம்

இடைநிறுத்தப்பட்டிருந்த தம்புள்ளை காலநிலை கட்டுப்பாட்டுக் களஞ்சிய வேலைத்திட்டத்தின் மேலதிக அபிவிருத்தி நடவடிக்கை பொருட்டு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 இன் முதல் 06 மாதங்களில் இவ்வேலையை நிறைவு செய்யப் பிரேரிக்கப்பட்டுள்ளது. தற்போது நிர்மாண நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

10. பெண் தொழில்முயற்சியாளரை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் பகிர்ந்தளித்தல்

முன்னோடி வேலைத்திட்டமாக 2023 இல் இவ்வேலைத்திட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 28 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு ஒரு நாள் வயதுடைய 12இ273 கோழிக்குஞ்சுகளும் மேலும் 680 பெண் தொழில்முனைவோருக்கு 17இ000 நாட்டுக் கோழிக் குஞ்சுகளும் விநியோகிக்கப்பட்டன. இந்த வேலைத்திட்டம் 2024 இல் நாடு முழுவதும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

11. தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரித்தல்

உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்காகவும் முறைப்படியும் மேற்கொள்ளும் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைச் சட்டகத்தில் வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறைகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்ட பின்னணி ஒன்றின் கீழ் மிகவும் தெளிவான பணிக்கூற்றுடன் கூடிய வர்த்தக ஒருங்கிணைப்புச் செயன்முறையை வழிகாட்டும் நோக்கில் தேசிய வர்த்தகக் கொள்கையொன்றைத் தயாரிக்கும் பணி 2023 மார்ச் இல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கிணங்க, தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரிக்கும் பணியில் 2023 இல் ஏற்பட்ட வளர்ச்சி பின்வருமாறு

- 2017 இல் அமைச்சரவை அங்கீகாரத்துடனான தேசிய வர்த்தகக் கொள்கையின் அடிப்படையில் 2048 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் தேசிய வர்த்தகக் கொள்கையின் முதலாம் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

- கௌரவ வர்த்தக, வணிக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம், 2048 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் தேசிய வர்த்தகக் கொள்கையின் மீளாய்வு பொருட்டு புதிய குழுவொன்று தாபிக்கப்பட்டது.

- 2023.08.11 ஆம் திகதியளவில் மீளாய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தின் அடிப்படையில் தேசிய வர்த்தகக் கொள்கையின் இரண்டாம் வரைவு தயாரிக்கப்பட்டது.

- தேசிய வர்த்தகக் கொள்கையின் வரைவு ஜனாதிபதி செயலகத்தின் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவின் மீளாய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

12. வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசேட கணக்காய்வு அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளை இனங்கண்டு, அந்நிறுவனங்கள் அவற்றை செயற்படுத்துகின்றனவா என்பது பற்றி மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

13. அமைச்சின் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் பிரிவின் ஊடாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2023 இல் 303 நுகர்வோர் முறைப்பாடுகளின் விசாரணையும், 343 பொதுசன விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், 73 வர்த்தகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், மேற்கொள்ளப்பட்டன. மேலும் 159 பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், 502 நடமாடும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன. சர்வதேச இ-வர்த்தக மாநாட்டில் பங்குபற்றியதுடன் நுகர்வோர் அதிகாரசபை ஊடாக 2023 இல் முழுமையான 126 தீடீர் சுற்றிவளைப்புகளும் 24816 சாதாரண சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தைகளில் 08 நுண்ணறிவுச் சோதனைகளும் அச்சோதனை அடிப்படையில் 02 நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதுடன், இவ்வருடத்தில் 324 பிரதேச செயலகங்களில் நுகர்வோர் சேவைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வர்த்தக, சேவை நடவடிக்கைகளில் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

14. கௌரவ திவங்கத லலித் அத்துலத் முதலி அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய 80களின் தொடக்கத்தில் மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தை வலுப்படுத்துவதற்காக மஹாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன், 10 வருடங்களின் பின்னர் 2023 ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஜா-எல நகரசபை மைதானத்தில 2023 டிசம்பர் 13 முதல் 17 ஆம் திகதி வரை வெற்றிகரமாக இக்கண்காட்சி நடைபெற்றது. கௌரவ வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் திரு.நளின் பிரனாந்து அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ், இந்த கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி தொடர்ச்சியாக நடத்தப்பட்டு மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.2 சிறப்பு அடைவுகளிற்கான சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

வெற்றிகள்

i. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில், குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், குறைந்த வருமானம் பெறுபவர்களின் போசாக்கு மட்டத்தையும் வருமானத்தையும் அதிகரித்து வாழ்க்கைச் செலவை முகாமைப்படுத்துவதற்கான ஒரு படியாக மேம்பாட்டு வேலைத்திட்டம் ஒன்று இனங்காணப்பட்டது. இதன் கீழ், பிள்ளைகளினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான நீண்டகால நடவடிக்கையாக, முன்னோடித் திட்டமொன்றாக, முட்டை, இறைச்சி மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கம்பஹா மாவட்டத்தில் கோழிக் குஞ்சுகள், ஆட்டுக் குட்டிகள் மற்றும் பன்றிக்குட்டிகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ii. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதியின் முக்கியத்துவம், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள், நுகர்வோரைப் பாதுகாப்பதில் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் வகிபாகம், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அடிப்படை ஏற்றுமதிச் செயல்முறை, ஏற்றுமதி சந்தைகளை இங்காணுதல், நுழைவு ஏற்றுமதி சந்தை, சட்டத் தேவைகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் மற்றும் இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் நிலையாண்மைக்கான அங்கீகார சபையின் வகிபாகம் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

iii. தற்போது மையப்படுத்தப்பட்ட நுகர்வோர் சேவை அதிகாரசபைக்கு நாடளாவிய ரீதியில் பெற்படும் முறைப்பாடுகளை விசாரிக்கும் முறையை சம்பந்தப்பட்ட மாவட்ட அளவில் மேற்கொள்ளும் வகையில் பரவலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை இனங்காணுவதன் மூலம் நுகர்வோருக்கு வசதியை வழங்குதல்.

iv. உள்ளூர் சந்தைக்கு வழங்கப்படும் தேங்காய் எண்ணெயின் தரம் மற்றும் சந்தைக்கு வழங்கப்படும் பொதி செய்யப்படாத தேங்காய் எண்ணெயின் தரம் ஆகியவற்றை பரிசீலிக்கும் நடவடிக்கையாக, அத்தேங்காய் எண்ணெயை சந்தைக்கு கொண்டு வந்த சங்கம் எது என்பது பற்றி அத்தேங்காய் எண்ணெய் விற்பனையாளர்களால் குறிப்பிடப்பட வேண்டிய முறை பற்றி தேவையான முறைமையைத் தயாரிப்பதற்கும், அவ்வுற்பத்திகளை சந்தைக்கு வெளியிடுதல் பற்றிய ஏற்பாடுகளைத் திட்டமிடுதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன..

v. ”கூட்டுறவு மொத்த விற்பனை நிறுனனத்தை (சதொச) மறுசீரமைத்தல்” என்ற தலைப்பில் 23/1208/627/018 ஆம் இலக்க மற்றும் 2023.06.26 ஆம் திகதி கௌரவ வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2023.07.10 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில், எட்டப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அதன் சகல ஊழியர்களையும் .2023.09.30 ஆம் திகதி முதல் ஓய்வு பெறச்செய்யப்பட்டனர்.

vi. ”தேசிய கூட்டுறவு இயக்கம் தொடர்பான நிரல் நிறுவனங்களை மறுசீரமைத்தல்” என்ற தலைப்பில் 23/1626/627/020 ஆம் இலக்க மற்றும் 24.08.2023 தேதியிட்ட கௌரவ வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2023.10.23 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில், கொள்கைரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிரல் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான அலுவலகங்கள் அமைந்துள்ள நிலையத்திற்குரிய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ் நியமிப்பதற்கு, நிரல் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் திணைக்களம்சார் பதவிகளில் பணிபுரியும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைப் பேணி, எஞ்சியவர்களை அவர்களின் விருப்பத்திற்கேற்ப மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களுக்கு விடுவித்தல் பொருட்டு 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளிற்கிணங்க தாபிக்கப்பட்ட நிரல் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவையும் இல்லாதொழிப்பதற்கு மற்றும் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனச் (கூட்டிணைக்கப்பட்ட) சட்டத்தின் பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் அதிகாரங்களை செயற்படுத்துதல் மற்றும் அதன் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் பணிகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் பொருட்டு இந்நிறுவனத்தை கொழும்பு 03, காலி வீதியில் அமைந்துள்ள இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் பிரதான கட்டடத்தில் நிறுவி, அதன் நடவடிக்கைகளை அவ்விதத்தில் பேணுவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

vii. **வெளிநாட்டு உணவு மானியங்களைப் பகிர்ந்தளித்தல்**.

2020 முதல் 2022 வரை நிலவிய கோவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு வழங்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட உணவுப்பொருள் மானியங்களை இலங்கை அரசின் சார்பில் கையேற்று துறைமுகத்திலிருந்து விடுவித்து, விநியோகிக்கும் நடவடிக்கைகள் 2023 இலும் உணவு ஆணையாளர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, தாய்லாந்து மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற அரிசி, சீனி, பருப்பு அடங்கலான உணவுப் பொருட்களை இலங்கை அரசின் சார்பில் உரியவாறு விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

viii. மெட்ரிட் சாசனத்தில் நுழைதற்கான ஆரம்பப் பணிகளை நிறைவுசெய்தல்

உள்நாட்டு வர்த்தக அடையாளங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்யும் வசதியை வழங்குகின்ற உலக புலமைச் சொத்துகள் அமைப்பால் நிர்வகிக்கப்படும் மெட்ரிட் சாசனத்தில் நுழைவதற்கு புலமைச் சொத்துகள் சட்டத்தில் தேவையான திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் வரைவிற்கு புலமைச் சொத்துகள் அமைப்பின் ஆலோசகர்களது அவதானிப்புகள் பெறப்பட்டுள்ளதுடன், அவ் அவதானிப்புகள் மற்றும் புலமைச் சொத்துகள் அலுவலகத்தின் அவதானிப்புகளுடன் சட்ட வரைஞர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டு, சர்வதேச ரீதியாக வர்த்தக அடையாளங்களை பதிவு செய்யக்கூடிய இலகுவான முறையொன்றைத் தாபித்து புலமைச் சொத்துகள் சட்டத்தைத் திருத்துவதற்கான அங்கீகாரம் பொருட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ix. 2023 இல் புலமைச் சொத்துகள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் கீழ் அச்சட்டத்தை செயல்படுத்தத் தேவையான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்ப இவ்வருடம் இயலுமாகவிருந்தது. அதன்படி இறுதிக் காலாண்டினுள் பூகோள குறிகாட்டிகளை பதிவுசெய்தலை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பொருட்டு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

x. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் சீன உதவியின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு அரிசி விநியோக நிகழ்ச்சித்திட்ட – முதற் கட்டத்தின் கீழ் 5000 மெட்ரிக் தொன் அரிசியும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 5800 மெட்ரிக் தொன் அரிசியும் விநியோகிக்கப்பட்டது.

xi. மாவட்ட ரீதியாக தற்போது மேற்கொள்ளப்படும் பல்வேறு உற்பத்திகள், சேவைகளை ஏற்றுமதிச் சந்தைக்கு அனுப்பும் பொருட்டு வர்த்தகத் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், புதிய உற்பத்தியாளர் ஆகியோரை தெளிவுபடுத்தும் பொருட்டு பயிற்சிப்பட்டறை நடத்த நடவடிக்கை எடுத்தல்.

சவால்கள்

- நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக செலவின மட்டுப்படுத்தல் பற்றிய சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிட்டமையால் திட்டமிட்ட சில நிகழ்ச்சித்திட்டங்கள்/ வேலைத்திட்டங்களை முறையாக செயற்படுத்த முடியாமை.

எதிர்கால இலக்குகள்

i. அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பராமரித்தல் மற்றும் விநியோகித்தல் மூலம் சந்தையில் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து தரமான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் தற்போதுள்ள சந்தைப் பற்றாக்குறையை அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டின் கீழ் அவசரத் தேவைகளை நிர்வகிப்பதற்கு மிகவும் பொறுப்பான முறையில் உணவுப் பாதுகாப்பைப் பேணுதல்.

ii. கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக முட்டை உற்பத்தியிலிருந்து விலகிய சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளரை மீளவும் அப்பணிகளில் ஈடுபடுத்தி சந்தையில் முட்டை விநியோகத்தை சுமுகமாக்குதல்.

iii. கொழும்பு மாக்கன் மாக்கர் மாவத்தையில் கூட்டுறவுச் சதுக்கத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கையை செயற்படுத்த எதிர்பார்த்தல்.

iv. புதிய அளவீட்டு தரநிலைகளைத் தாபித்து அளவீட்டு ஆய்வகத்தின் பணிகளை விரிவுபடுத்தல்.

v. ஐந்து அளவீட்டு பிரிவுகளுக்கு தேசிய அளவீட்டு ஆய்வகத்தின் பணிகளை விரிவுபடுத்தல்.

vi. பல்கலைக்கழகக் கல்விக்கு அளவையியலை ஒரு பாடமாக உள்ளடக்குதற்கு நடவடிக்கைகளைத் திட்டமிடல்.

vii. சுயாதீன வலையமைப்பொன்றை நிறுவுதல் - மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 70 மில்லியன் ஆகும்.இங்கு 25 மாவட்ட அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பதற்கும், வர்த்தகத் தரவு முறையை தயாரிப்பதன் ஊடாக நுகர்வோருக்கு சரியான, நம்பிக்கையான அளவீட்டு சேவையை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்த்தல்

viii. 2024 இல் லங்கா சதொச மெகா(Mega) விற்பனை நிலையங்கள் 5 ஐயும் சாதாரண லங்கா சதொச விற்பனை நிலையங்கள் 10 ஐயும் ஆரம்பிக்க முன்மொழியப்பட்டதுடன், அதன் ஊடாக நுகர்வோருக்கு குறைபாடற்ற வகையில் அரசின் சலுகை விலையில் கொள்வனவு செய்யக்கூடிய விற்பனை வலையமைப்புகளை 465 வரை விருத்தி செய்தல்.

ஏ. எம். பீ. எம். பீ அத்தபத்து
செயலாளர்
வர்த்தக வணிக, மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

A. M. P. M. B. Atapattu
Secretary
Ministry of Trade, Commerce and Food Security

3. ஆம் அத்தியாயம் - 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	2022	
-	**வருமானப் பெறுகைகள்**			-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4		-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		4,058,732,338	5,857,618,948	ஏசீஏ-3
-	வைப்புகள்		127,708,901	62,363,639	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		12,989,100	24,868,080	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**4,199,430,338**	**5,944,850,666**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)(ஆ)**		**4,199,430,338**	**5,944,850,666**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		18,204,771	87,000	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		4,181,225,567	5,944,763,666	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
206,400,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	133,519,142	133,614,037	

184,100,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	122,063,505	196,087,581	ஏசீஏ-2(ii)
700,600,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	650,066,731	3,288,534,934	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
1,091,100,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**905,649,379**	**3,618,236,552**	
	மூலதனம் செலவினம்				
69,600,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	5,001,306	6,697,376	
2,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	17,079	3,813,750	
48,000,000	மூலதன மாற்றல்கள்	12	-	47,349,052	ஏசீஏ-2(ஸை)
3,803,200,000	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	3,803,101,128	-	
600,000	திறன் விருத்தி	14	363,000	646,330	
45,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	30,988,606	4,152,583,265	
3,968,400,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**3,839,471,119**	**4,211,089,773**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		125,298,048	39,891,620	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		11,799,640	23,390,465	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**137,097,688**	**63,282,085**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		4,882,218,186	7,892,608,410	
5,059,500,000	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(700,992,619)	(1,947,844,744)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(701,253,180)	1,947,844,744	**ஏசீஏ-7**
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		260,560		**ஏசீஏ-3**
			(700,992,620)	-	

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	233,716,207	197,047,128
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	15,004,262	16,193,721
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	260,560	-
மொத்த சொத்துக்கள்		**248,981,028**	**213,240,849**
தேறிய சொத்துக்கள் /. உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(19,865,682)	(16,265,370)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		233,716,207	197,047,128
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	34,869,943	32,459,091
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	260,560	-
மொத்தப் பொறுப்புக்கள்		**248,981,028**	**213,240,849**

பக்க இலக்கம் 7 முதல் 30 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 31 முதல் 39 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2024-02-28

A. M. P. M. B. Atapattu
Secretary
Ministry of Trade, Commerce and Food Security

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2024/02/28

A. M. P. M. B. Atapattu
Secretary
Ministry of Trade, Commerce and Food Security

பிரதான நிதி உத்தியோகத்தர்/. பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)/. ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 27/2

Aravindi De Silva
Chief Financial Officer
Ministry of Trade
No. 492, R. A. De Mel Mawatha,
Colombo 03.

3.3 நிதிபாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதிப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	66,543,637	29,016,058
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	4,058,732,338	5,857,618,948
முற்பணங்களை அறவிடல்	7,054,256	37,779,060
வைப்புக்களின் பெறுகை	127,708,901	42,149,886
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	4,260,039,132	5,966,563,952
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	253,628,191	291,199,065
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	42,279,731	1,364,201,178
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	75,771,161
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	18,204,771	87,000
முற்பணக் கொடுப்பனவு	11,885,318	40,526,846
வைப்புக் கொடுப்பனவு	125,298,048	23,261,344
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	451,296,060	1,795,046,594
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	3,808,743,072	4,171,517,358
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	5,381,385	40,399,458
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	5,381,385	40,399,458
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(5,381,385)	(40,399,458)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)(ஊ)	3,803,361,688	4,131,117,900
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	3,803,101,128	4,131,117,900
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	3,803,101,128	4,131,117,900
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	(3,803,101,128)	(4,131,117,900)
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	260,560	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	260,560	-

3.4 நிதிக்கூற்று அட்டவணை

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

